<u>நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்க மடல்</u>

**வெளியீடு- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை. & இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்**

**<u>தேதி</u> 05.08.16**

<u>சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை:-</u>

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் லேசான மழை பெறப்பட்டது.

2. தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை $16^o$ செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை $10^o$ செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 92-94% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 88% - 92% இருந்தது. காற்றின் வேகம் 19-29 (கிலோ.மீ./மணிக்கு).

| வானிலை குறிப்புகள் | 06.08.16 | 07.08.16 | 08.08.16 | 09.08.16 | 10.08.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 1 | 0.5 | 0 | 0 | 0.5 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 16 | 16 | 16 | 17 | 17 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் ($^0$ செ.) | 10 | 10 | 10 | 10 | 10 |
| மேகமூட்டம் (ஒக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 85 | 85 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 86 | 86 | 86 | 84 | 84 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ./மணிக்கு) | 20 | 20 | 20 | 20 | 20 |
| காற்றின் திசை | 320 | 320 | 320 | 320 | 320 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- மாவட்டத்தில் லேசான மழை வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.
- கார்னேசன் பயிரில் ப்யூசேரியம் அழுகல் நோயை கட்டுப்படுத்த டெபுகொனோசோல் 50 %, ட்ரைப்ளாக்ஸிஸ்டாரடபிண் 25 % கலவை மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து வேர்பகுதியில் ஊற்றவும்.
- நூற்புழு தாக்குதலை தவிர்க்க, கேரட் பயிரை தொடர்ந்து பயிரிடாமல், மாற்று பயிரை பயிரிட்டு, பயிர் சுழற்சியை மேற்கொள்வது அவசியம்.

- *கோஸ் பயிரில் வேர்முடிச்சு நோயை (கென்டை நோய்) தடுக்க, ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனஸ், 10 கிராம் ட்ரைகோடெர்மா மற்றும் 10 கிராம் பெசில்லோமைசிஸ் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து நடலாம்.*

- உருளை கிழங்கில் விதைப்பின் போதும், 30 ஆம் நாளிலும் ஏக்கருக்கு 50 கிலோ யூரியா, 266 கிலோ சூப்பர் பாஸ் பேட், 40 கிலோ பொட்டாஸ் இடுவீர்.

- *பழமரங்களின் மீது பாசி படர்வதை தடுக்க,ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ கடற்சிப்பி சுன்ணாம்பை கரைத்து மரத்தின் பட்டை மீது பூசவும்.*

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி
நிலையம், உதகை.